**Dated : 07.01.2025**

**O.S.No. 11/2023**

**PW.2 – திரு. மகேந்திரன்**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு செய்விக்கப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

5ம் பிரதிவாதி தீர்த்தகிரியின் நிலத்தில் தான் இந்த சம்பவம் நடந்ததாக நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். அவர் நிலத்தில் தண்ணீர் தொட்டி மற்றும் மின் இணைப்பு ஆகியவை உள்ளன என்றால் சரிதான். தீர்த்தகிரியின் நிலத்திற்கும், என் வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் உள்ளது என்றால் சுமார் 50 மீட்டர் தூரம் இருக்கும். இறந்து போன ஈஸ்வரி என்பவருக்கு மின்சாரம் தாக்கி இறந்து போன பிறகு தான் நான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு அந்த இடத்தில் டிராக்டர் இடித்து கரன்ட் கம்பம் கீழே விழுந்துகிடந்தது என்றால் சரிதான். மேற்படி விபத்தானது 04.10.202–ம் தேதி காலை சுமார் 8.15 மணிக்கு நடந்தது. அப்போது மின்சார வாரியம் துறையை சேர்ந்தவர்கள் முந்தைய நாள் இரவே மேற்படி மின் இணைப்பை துண்டித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி மின்சார துண்டிப்பு ஏற்பட்டாலும் விளக்கு எறிவதற்காக UPS வைத்துள்ளார் என்றால் சரிதான்.

UPS முறையாக மின் இணைப்பு கொடுக்காமல் 5ம் பிரதிவாதி மின் இணைப்பு கொடுக்காததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் தவறு. 1 முதல் 4 பிரதிவாதிகள் முதல் நாளே மின்சார துண்டிப்பு செய்துவிட்டார்கள் என்றும், இந்த வழக்கில் 5ம் பிரதிவாதி தான் வைத்திருந்த UPSஐ முறையாக Connection கொடுக்காமல் பயன்படுத்தியதால் கரன்டானது UPS–ல் இருந்து Return ஆகவிட்டது என்றால் சரியல்ல. இறந்தவர் எனக்கு அண்ணி உறவுமுறை ஆவார். கவின் எனது அண்ணி மகளின் குழந்தையாவார். நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும், இறந்து போனவர் எனக்கு உறவினர் என்பதால், தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>5 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

என்னை சாட்சி சொல்ல வாதி நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார். நானும், வாதிகளான சரவணன், சக்திவேல் மற்றும் சத்தியா ஆகியோர் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் இந்த விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் விபத்தை பார்த்தவுடன் முதன் முதலாக ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொன்னேன். இந்த விபத்து நடந்த போது இந்த வழக்கின் 5ம் பிரதிவாதி

தீர்த்தகிரி சம்பவ இடத்திலிருந்தார். தீர்த்தகிரி சம்பவத்திற்கு முன்பாகவே 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு தொலைபேசி மூலமாக தகவல் தெரிவித்தாரா என்றால் அந்த விவரம் தெரியாது. மேற்படி இறந்து போன ஈஸ்வரி மற்றும் குழந்தை 5ம் பிரதிவாதி அனுமதியில்லாமல் தான் அன்றைய தினம் துணி துவைக்க அவர்களது நிலத்திற்கு சென்றார்கள் என்றால் சரியல்ல, அனுமதியுடன் தான் சென்றார்கள். மேற்படி மின்கம்பி அறுந்து விழுந்ததை 5ம் பிரதிவாதி உடனடியாக 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு தகவல் தெரிவித்தார் என்றும், 1 முதல் 4 பிரதிவாதிகள் உடனடியாக விபத்து நடந்த இடத்திற்கு வரவில்லை என்பதால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், அதனால் 5ம் பிரதிவாதிக்கும், இந்த விபத்திற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி தீர்த்தகிரி கவனக்குறைவாக நடக்கவில்லை என்றால் சரியல்ல. இறந்து போன நபருக்கு இழப்பீடு கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் 1 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் தான் உத்தரவு செய்ய வேண்டும் என்றும், 5ம் பிரதிவாதியை பொருத்து தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி இழப்பீடு எதுவும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்பதாலும், இறந்து போன நபர் எனக்கு உறவினர் என்பதால் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- XXX,
Principal District Judge,
Krishnagiri.